# පොලිස් මාධ්‍ය කොට්ඨාසය
# பொலிஸ் ஊடகப் பிரிவு
# POLICE MEDIA DIVISION
සෙත්සිරිපාය, බත්තරමුල්ල

තැ.පෙ.අංකය / த. பெ.இ / Po.Box No: 10120

ෆැක්ස් / தொலைநகல / Fax: 011-2171635

දුරකථන / தொலைபேசி / Telephone: 011-2887973 (HUNTING)

වෙබ්.ලිපිනය / இணையதளம் / Web Site: www.Police.lk

ඊ මේල් / மின்னஞ்சல் / E-mail: dir.media@police.gov.lk


මගේ අංකය / எனது இலக்கம் / My NO: 416/2024

ඔබේ අංකය / உமது இலக்கம் / Your No: / 2024

දිනය / திகதி / Date: 09/03/2024

**ஊடக**

**தலைமை ஆசிரியர் / செய்தி ஆசிரியர்,**
**செய்தி பணிப்பாளர்/ செய்தி முகாமையாளர்**
**சகல ஊடக நிறுவனங்கள்.**

## கௌவர நீதிமன்றத்தினால் வழங்கப்பட்ட தீர்ப்புக்கு மாறாக தொல்லியல் பாதுகாப்புப் பகுதியில் அத்துமீறி செயற்பட்ட 8 பேர் கைது – நெடுங்கேணி பொலிஸ் நிலையம்

கௌரவ நீதிமன்றத்தில் தற்போது வழக்கு விசாரணைகள் நிலுவையிலுள்ள போதிலும் நெடுங்கேணி பொலிஸ் பிரிவில் உள்ள வெடுக்குநாறி மலையில் தொல்பொருள் நிலையப் பிரதேசத்தினுள் சிவராத்திரி பூஜையை நடாத்துவதற்கு அனுமதி வழங்கப்பட வேண்டும் என தொல்பொருள் பிரதேசத்தில் உள்ள இந்து ஆலய பூசகர் உள்ளிட்ட குழுவினர்களினால் வவுனியா கௌரவ நீதவான நீதிமன்றத்தில் இலக்கம் B 540/23 இன் கீழ் மனுதாக்கல் செய்யப்பட்டு அனுமதி கோரப்பட்ட போதிலும், அவ்வாறான விஷேட பூஜைகள் நடாத்துவதற்கு அனுமதி வழங்க முடியாது என கௌரவ நீதிமன்றம் 2024.03.04 ஆம் திகதியன்று தீர்ப்பு வழங்கியது.

மேலும், தொல்லியல் பிரதேசத்தில் பகல் நேரத்தில் சாதாரணமாக நடாத்தப்படும் வழிபாட்டு பூஜைகளுக்கு மேலதிகமாக விஷேட பூஜைகள் நடாத்துவதை தவிர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் என 2024.03.06 ஆம் திகதி தொல்பொருள் பதில் பணிப்பாளர் அவர்களினால் வட மாகாண சிரேஷ்ட பொலிஸ் மா அதிபர் அவர்களிடம் விடுக்கப்பட்ட கோரிக்கையின் பிரகாரம் 2024.03.08 ஆம் திகதியன்று சட்டம் மற்றும்

ஒழுங்கை பாதுகாப்பதற்காக பொலிஸ் உத்தியோகத்தர்களை தொல்லியல் பிரதேசத்தில் பணியில் அமர்த்தப்பட்டன.

எவ்வாறாயினும், இத் தொல்லியல் பிரதேசத்தில் மஹா சிவராத்திரி தினத்தன்று 500 க்கும் மேற்பட்ட பொதுமக்கள் வருகை தந்து சாதாரணமாக பூஜை வழிபாடுகள் செய்தனர். இரவு நேரத்தில் தொல்லியல் பிரதேசத்தில் பூசகர்கள் மற்றும் 40 பேரை கொண்ட குழுக்களால் நீதிமன்ற தீர்ப்பையும் மீறி தொல்பொருள் திணைக்களம் அல்லது வனப் பாதுகாப்பு திணைக்களத்தின் அனுமதியின்றி 2024.03.08 ஆம் திகதி இரவு நேரத்தில் யாகம் செய்து விஷேட சிவராத்திரி பூஜைகள் நடாத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. இரவு கடமையிலிருந்த பொலிஸ் உத்தியோகத்தர்களால் அவ்வாறு செய்ய வேண்டாம் என தெரிவித்தபோதிலும் அவர்கள் அதனையும் மீறி தொடர்ந்து செயற்பட்டதுடன், நீதிமன்ற தீர்ப்பையும் மீறி நாட்டில் நிலவும் வறட்சியான காலநிலை காரணமாக வனப் பிரதேசத்தினுள் யாக பூஜைகள் நடாத்துவதனூடாக வனப் பிரதேசத்தில் தீ ஏற்பட்டு அழிவடைவதற்கான சந்தர்ப்பம் உள்ளதால் வன பிரதேசத்தில் அத்துமீறி பிரவேசித்தமை மற்றும் சட்ட முரணற்ற வகையில் ஒன்று கூடிய மக்கள் கூட்டத்தைச் சேர்ந்தவர்கள் எனும் குற்றத்தின் கீழ் பிரதான பூசகருடன் 08 பேரை பொலிஸார் கைது செய்துள்ளனர்.

அவ்வாறு கைது செய்யப்பட்ட சந்தேக நபர்கள் நெடுங்கேணி, புளியங்குளம், கனகராயன்குளம் மற்றும் மாமடுவை ஆகிய பிரதேசத்தில் வசிக்கும் 24, 29, 30, 34, 37 மற்றும் 54 வயதுடையவர்கள் ஆவர்.

பொலிஸ் ஊடகப் பேச்சாளர் காரியாலயம்.
பொலிஸ் ஊடகப் பிரிவு.